# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட / இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2016/2017 நவம்பர் 2019)

## TLS 2233 இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல்

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி I

1. (அ) நாட்டார் பாடல்களில் 'கவி' களின் வடிவ, ஓசை அமைப்புப் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

   (ஆ) நாட்டார் கவிகளின் சமூகச் செயற்பாடு பற்றி யாது கூறுவீர்? (15 புள்ளிகள்)

2. (அ) தமிழ் நாட்டார் கலைகளின் வகைப்பாடுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   (ஆ) ஈழத்து வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் நிகழ்த்துகை மரபுகள் பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

3. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டு பற்றி விளக்குக.

   (அ) நாட்டார் கள ஆய்வு முறையியல்
   (ஆ) தாலாட்டுப் பாடல்களின் சொல்லாட்சிச் சிறப்பு
   (இ) நாட்டார் நம்பிக்கைக் கூறுகள்
   (ஈ) நாட்டார் மருத்துவத்தின் வகைப்பாடுகள் (10 x 2 = 20 புள்ளிகள்)

## பகுதி II

4. 1990 களின் பின் ஈழத்து நாட்டார் வழக்கியல் தொடர்பாக வெளிவந்த ஆய்வுகள் தொடர்பாக கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

5. "வாய்மொழி இலக்கியங்கள், மக்களின் சமூக வரலாற்றை எழுதுவதற்கான முதன்மையான சான்றுகளாக உள்ளன" இலங்கைத் தமிழர் மத்தியில் பயிலப்பட்டு வரும் வாய்மொழிக் கதைகள், வாய்மொழிப் பாடல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றை நிறுவுக. (20 புள்ளிகள்)

6. பொலிப் பாடல்கள், ஏர்ப்பாடல்கள் ஆகியவற்றில் வெளிப்படும் தலைமைக் கருத்துக்கள் பற்றிக் கருத்துரைக்குக. (20 புள்ளிகள்)

7. "பழமொழிகளில் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும் தரிசிக்க முடிகின்றது" மதிப்பிடுக. (20 புள்ளிகள்)